DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| S.T.C.NO. 702 / 2022 | | Crime No.: | Station : |
| PW : 1 | LW : | C.M.P. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முகம் | Caste | |
| Father's Name | சுப்பண்ணக் கவுண்டர் | Calling | கைத்தறி சேலை வியாபாரம் |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | சத்தி | Age | 65 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 01.12.2023 |

**(எதிரி ஆஜர்)**

**குறுக்கு விசாரணை**

1. எதிரியை எனக்கு எப்படித் தெரியும் என்றால் என்னுடைய Bussiness நண்பர்கள் மூலமாகப் பழக்கம். யார் எனக்கு எதிரியை அறிமுகம் செய்தார் என்றால் எல்லோரிடமும் பேசுவது போல் எதிரியும் எனக்குப் பழக்கப்பட்ட நண்பர். 2017-ம் ஆண்டு தீபாவளி மாதம் ரூ.30000/- மட்டுமே மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100-க்கு 5 ரூபாய் வட்டிக்கு எதிரி என்னிடமிருந்து கடன் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ரூபாய் 30000/- நான் எதிரிக்கு கடன் கொடுக்கும்போது எதிரியிடமிருந்து கையெழுத்து மட்டும் செய்த பூர்த்தி செய்யப்படாத வழக்குக் காசோலையும் கையெழுத்து மட்டும் செய்த பூர்த்தி செய்யப்படாத ஒரு கடனுறுதிச் சீட்டையும் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

2. அதன்பிறகு மேற்படி ரூபாய் 30000/-க்கு மாதம் ரூ.1500/- வட்டி வீதமாக ஒன்றரை வருடங்கள் எனக்கு எதிரி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. 2019 அக்டோபர் மாதம் அந்த மாதத்திற்கான வட்டி ரூபாய் 1500/- மற்றும் அசல் ரூபாய் 30000/- சேர்த்து மொத்தம் ரூபாய் 31,500/- ஐ எதிரி எனக்குத் திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி பணத்தை எதிரி எனக்கு திரும்ப கொடுத்துவிட்டு எதிரி கொடுத்த மேற்படி வழக்குக் காசேலையும், கடனுறுதிச் சீட்டையும் திரும்பக் கேட்டபோது நான் பீரோவில் வைத்திருப்பதாகவும் தற்போது கிடைக்கவில்லை என்றும், பிறகு தேடி எடுத்து திரும்ப ஒப்படைப்பதாகவும் நான் கூறினேன் என்றால் சரியல்ல. என்னுடன் எதிர்காலத்திலும் வரவு, செலவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரியும் மேற்படி காசோலையையும் கடனுறுதிச் சீட்டையும் நான் எதிரிக்கு திரும்ப ஒப்படைப்பேன் என்ற நம்பிக்கையில் எதிரி இருந்தார் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் இடையே வியாபாரம் எதுவும் இல்லை. நான் நம்பிக்கை வார்த்தை கொடுத்ததால்தான் மேற்படி

காசோலை மற்றும் கடனுறுதிச் சீட்டை திரும்பப் பெற சட்டபடியான அறிவிப்பு ஏதும் எதிரி எனக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

3. எதிரியின் குடும்பத்தில் சிறிய விபத்து ஏற்பட்டதாலும், வியாபாரம் நொடிந்துவிட்டதாலும் எதிரியின் வங்கிக் கணக்கை 2019-ம் ஆண்டு நவம்பர் மாதம் முடித்துக்கொண்டார் என்றால் நான் வழக்குக் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்து அது திருப்பப்பட்ட பிறகுதான் வங்கிக் கணக்கு முடித்து வைத்துள்ளது எனக்குத் தெரியவந்தது. எதிரியின் வியாபரம் நொடிந்துவிட்டது என்பதையும் வங்கிக் கணக்கு முடித்துவைக்கப்பட்டுள்ளது என்ற விபரமும் எதிரி குடும்பத்தில் விபத்து ஏற்பட்ட விபரமும் எனக்கு நேரடியாக தெரிந்தே இந்த காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. எதிரி என்னிடம் பலமுறை வழக்குக் காசோலையும் கடனுறுதிச் சீட்டையும் திரும்ப ஒப்படைக்க கேட்டார் என்றாலும் நான்தான் அதை அவரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டு நான் எதிரியிடமிருந்து வாங்கவில்லை. எதிரி வாங்கியதாகச் சொல்லும் ரூபாய் 30000/-யும் அவர் அந்த தேதியில் என்னிடம் வாங்கவில்லை. நான் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ரூபாய் 5,00,000/-யை 04.02.2022-ம் தேதியில் எதிரி என்னிடமிருந்து வாங்கவில்லை என்றாலும், அன்று இந்த வழக்குக் காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. செக்யூரிட்டிக்காக கொடுத்த வெற்றுக் காசோலையை நான் தவறுதலாக இந்த வழக்கில் பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எப்போது எதிரி என்னிடம் ரூபாய் 500000/-யைக் கடன் கேட்டார் என்றால் 01.02.2022 அன்று கேட்டார். எந்த வங்கிக் கணக்கிலிருந்து மேற்படி தொகையை எதிரிக்குக் கொடுத்தேன் என்றால் எனது மனைவி கையில் வைத்திருந்த தொகையையும் நான் எனது வியாபாரத்திற்காக கையில் வைத்திருந்த தொகையையும் சேர்த்துதான் எதிரிக்கு கடன் கொடுத்தேன். மேற்படி விபரத்தை எனது அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் IT செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. ரூ.20000/-க்கு மேல் ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்பது பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். நண்பர் என்பதாலும் இரண்டு மாதத்தில் திரும்பத் தருவதாகக் கூறியதாலும் ரூ.500000/- அவருக்கு ரொக்கமாகக் கொடுத்தேன். இரண்டு மாதம் கழித்து நான் ஏன் எதிரியின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வசூலுக்கு தாக்கல் செய்து உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன். வழக்குக் காசோலையின் தேதி, பெயர் மற்றும் தொகையை அதிகமாக நிரப்பி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் ஏன் வருமான வரி செலுத்துவதில்லை என்றால் சிறிய அளவில் வியாபாரம்

செய்வதால் வருமான வரி செலுத்தவில்லை. நான் எனக்கு ரூபாய் 500000/-யைக் கடனாகக் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லாததால்தான் நான் வருமான வரி செலுத்துவதில்லை என்றால் சரியல்ல. நான் 20 வருடங்களாக சேலை வியாபாரம் செய்து வருகிறேன். சிறிது சிறிதாக சீட்டுக்கள் போட்டு பணம் வைத்திருந்தேன். நான் 20 வருடமாக மேற்படி வியாபரம் செய்து வருவதற்கு ஆவணங்கள் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி விபரங்களை பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. 2019-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப் பிறகு எனக்கும், எதிரிக்கும் எவ்வித வரவு, செலவும் இல்லை என்றால் 2022-ம் வருடம் இந்த வழக்கு Transaction-தான் எனக்கும், எதிரிக்கும் இடையே நடந்த முதல் கொடுக்கல், வாங்கல் ஆகும். என்னிடம் காட்டப்படும் காசோலையிலுள்ள தேதி, தொகை மற்றும் வாசங்கள் என்னால் எழுதப்பட்டது என்றால் இல்லை. மேற்படி காசோலை 2017 வருடத்தில் எதிரி எனக்குக் கொடுத்த காசோலை என்றாலும் அதை நான்தான் பூர்த்தி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 2020 வருடத்திலிருந்து 2022 மார்ச் மாதம் வரை கொரோனா தொற்றுக் காலம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி காலகட்டத்தில் கொரோனா தொற்று இருந்தது என்றாலும், அப்போது யாருக்குமே வியாபாரம் சரியாக நடைபெறவில்லை என்றாலும் அந்த சமயத்தில் கொஞ்சம் சரிந்துதான் இருந்தது. மேற்படி காலகட்டத்தில் எதிரிக்கு ரூபாய் 500000/- கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் கொரோனா காலகட்டம்தான் வருமானம் குறைந்தது உண்மைதான் சிறுக சிறுக சீட்டுப் போட்டு வைத்திருந்த பணத்தை எடுத்து வைத்திருந்தேன்.

8. சீட்டு பணத்தை நான் எப்போது எடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. யாரிடம் நான் சீட்டுப் போட்டிருந்தேன் என்றால் புளியம்பட்டியில் பாலு, சத்தியமங்கலத்தில் கருப்புசாமி ஆகியோரிடம் சீட்டுப் பணம் போட்டிருந்தேன். எவ்வளவு ரூபாய்க்கு சீட்டுப் போட்டிருந்தேன் என்றால் ரூபாய் 5,00,000/-க்கு ஒரு சீட்டும், ரூபாய் 2,00,000/-க்கு ஒரு சீட்டும் போட்டிருந்தேன். என் தரப்பு சாட்சியாக மேலே நான் சொன்ன பாலு மற்றும் கருப்புசாமி ஆகியோரை நான் விசாரித்தேனா என்றால் கொரோனா காலத்திற்குப் பிறகு அவர்களே சீட்டு நடத்தும் தொழிலை விட்டுவிட்டார். அதனால் அவர்களை விசாரிக்கவில்லை. மேற்படி நபர்களை சாட்சியாக விசாரித்தால் வழக்கின் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என்பதால்தான் அவர்களை நான் விசாரிக்க இயலாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9. 2022 ஜீன் மாதம் கொரோன 4-ம் அலை வருவதாக மத்திய அரசு கூறியிருந்தார்கள் என்றாலும் அந்த காலகட்டத்தில் எந்த ஒரு வியாபாரமும் பெரிய அளவில் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த வருடம் பிப்ரவரி மாதமே கடன் கொடுத்துவிட்டேன்.

அவரும் ஏப்ரல் மாதத்திலேயே திரும்பத் தருவதாகக் கூறியிருந்தார். எதிரி என்னிடம் பணம் கேட்டு 2 நாட்கள் இடைவெளியில் ரூபாய் 5,00,000/- எதிரிக்கு கொடுக்க சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. நான் பணம் புரட்ட அவசியம் இல்லை ஏனெனில் சீட்டுப் பணத்தை எடுத்துக் கையில்தான் வைத்திருந்தேன். மேற்படி சீட்டுப் புத்தகத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் சீட்டுப் புத்தகம் எனக்குக் கொடுக்கப்படவில்லை. மேற்படி சீட்டுப் புத்தகத்தைத் தற்போது பெற்று என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் சீட்டுப் புத்தகம் கொடுக்கும் வழக்கமே இல்லை.

10. நான் ரூபாய் 5,00,000/- மற்றும் ரூபாய் 2,00,000/-க்கு சீட்டுக்கள் எதுவும் போடவில்லை என்றாலும், தற்போது நான் வழக்கிற்காக சீட்டுப் போட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் குடும்பத்தில் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அவரது அம்மாவை மட்டும் ஒருமுறைப் பார்த்துள்ளேன். எதிரிக்கு எவ்வளவு குழந்தைகள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எதிரிக்கு கல்யாணம் ஆகியுள்ளதா, குழந்தைகள் உள்ளதா இல்லையா என்ற விபரம் எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல் உண்மையாகவே ரூபாய் 5,00,000/-யை எதிரிக்கு கடனாகக் கொடுத்திருந்தால் எதிரியிடமிருந்து சொத்துப் சம்மந்தமான பத்திரதை வாங்கி வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு 5,00,000/- ரூபாய் கடன் கொடுப்பதற்கும், ரூபாய் 5,00,000/- எதிரி கடன் பெறுவதற்கும் எனக்கும், எதிரிக்கும் தகுதி இல்லை என்றால் சரியல்ல.

11. 01.02.2022 அன்று எதிரி என்னிடம் எந்த கடனும் கேட்கவில்லை என்றாலும், 04.02.2022 அன்று நானும் எதிரிக்கு மேற்படி தொகையை எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் Security-க்காக கொடுத்த ஆவணத்தைப் பயன்படுத்தி நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி வருமான வரி செலுத்துகிறாரா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியவில்லை. எதிரிக்கு என்ன வசதி, வாய்ப்புகள் உள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. இந்த வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.